செய்தி வெளியீடு எண் : 1014 நாள் : 21.07.2024

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையின் காரணமாக வங்கதேசத்தில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக முதற்கட்டமாக தமிழ்நாடு அரசு செலவில் விமான பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்பட்டு 49 மாணவர்கள் கொல்கத்தா, குவஹாத்தி, அகர்தலா ஆகிய விமான நிலையங்களில் இருந்து இன்று (21.07.2024) சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.</u>**

வங்கதேசத்தில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக தமிழர்கள் சிலர் தாயகம் திரும்ப இயலாத சூழலில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம், வங்கதேசத்தில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் தமிழ் அமைப்புகளைத் தொடர்பு கொண்டு விவரங்கள் பெறப்பட்டது.

மேலும், WhatsApp குழுக்கள் அமைத்து, அங்குள்ள தமிழ் மாணவர்களிடம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அவர்களது கோரிக்கைகள் பெறப்பட்டது. அவர்களது நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையின் காரணமாக, முதற்கட்டமாக இன்று (21.07.24), தமிழ்நாடு அரசு செலவில் விமான பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்பட்டு 49 மாணவர்கள் கொல்கத்தா, குவஹாத்தி, அகர்தலா ஆகிய விமான நிலையங்களில் இருந்து சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.

சென்னை விமான நிலையம் வந்தடையும் மாணவர்களை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மற்றும் அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திரு. பா. கிருஷ்ணமூர்த்தி I.O.F.S அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

| வ.எண் | மாவட்டம் | நபர்கள் |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | 12 |
| 2 | கடலூர் | 6 |
| 3 | தர்மபுரி | 5 |
| 4 | தஞ்சாவூர் | 5 |
| 5 | சேலம் | 3 |
| 6 | வேலூர் | 2 |

| வ.எண் | மாவட்டம் | நபர்கள் |
|---|---|---|
| 7 | ராணிப்பேட்டை | 2 |
| 8 | மதுரை | 2 |
| 9 | சென்னை | 2 |
| 10 | விருதுநகர் | 2 |
| 11 | ஈரோடு | 1 |
| 12 | திருவள்ளூர் | 1 |
| 13 | விழுப்புரம் | 1 |
| 14 | தென்காசி | 1 |
| 15 | திருவண்ணாமலை | 1 |
| 16 | தூத்துக்குடி | 1 |
| 17 | காஞ்சிபுரம் | 1 |
| 18 | மயிலாடுதுறை | 1 |
| | மொத்தம் | 49 |

மேலும், அடுத்த கட்டமாக மாணவர்களை வங்கதேசத்திலிருந்து தமிழ்நாடு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நேர்வில் மாணவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஆணையர்,
அயலகத் தமிழர் நலத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu